பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 08 செவ்வாய்க்கிழமை 22.06.2021 கதிர் 95

## பயணத்தடை நீக்கப்பட்ட கையோடு 11 மரணங்கள்

நாட்டில் நேற்று பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட நிலையில், வாகன விபத்துகளில் 11 பேர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இன்று தெரிவித்தார்.

இதன்படி மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளானமையால் 8 பேரும் 2

# முழு அரசுக்கு எதிராகவும் பிரேரணை கொண்டுவரவேண்டும்: கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை படுமுட்டாள்தனமானது



## சஜித் அணிக்கு ரணில் சாட்டையடி



முழு அரசுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியினராகிய சஜித் அணியால் அமைச்சர் உதய கம்மன்பில வுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம் பிக்கையில்லாப் பிரேரணை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் காணப்படும் கருத்து வேறுபாட்டை தீர்க்க அரசுக்கும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான், எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருந்தால், யாருக்கு எதிராகவும் இந்த நேரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கமாட்டேன். இது படுமுட்டாள் 2

## 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும்

# அரசியல் கைதிகளை விடுவிக்க பொறிமுறையை ஏற்படுத்துங்கள்



## நாடாளுமன்றில் அரசிடம் நாமல் கோரிக்கை

**வழக்கு விசாரணையில் தாமதம் ஏற்பட்டதால் 10 - 15 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கான ஒரு பொறிமுறையை அரசு செயற்படுத்த வேண்டும்.**

**- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ. நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** 2

## யாழ் போதனா வைத்தியசாலைக்கு 3 வென்டிலேட்டர்கள் அன்பளிப்பு



(ந.லோகதயாளன்)(கலையமுதன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 3 வென்டிலேட்டர்கள் இன்று தென்னிலங்கை வர்த்தகரால் 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தத்தை ஏற்படுத்தும் அரசு



### சர்வதேச அழுத்தத்தால் அல்ல என்கிறார் நீதி அமைச்சர் சப்ரி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது. இதற்காக உப குழுவொன்று அமைக்கப்படும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி இன்று நாடாளுமன்றத்தில் உரை 2

## கம்மன்பிலவை ஆதரிப்பார்களா முஸ்லிம் எம்பிக்கள்?

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலுசக்தி அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது எத்தகைய முடிவை எடுப்பது என்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர் என அரசியல் வட்டாரங்களில் 2

## எரிபொருள் விலை அதிகரிப்பை கண்டித்து எதிர்க்கட்சி போராட்டம்




இலங்கையில்எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள கட்சித் தலைமைகத்தில் இருந்து 2

## அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு



நாட்டில் எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் இன்றுமுற்பகல்கையளிக்கப்பட்டது. 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கம்மன்பிலவை ஆதரிப்பார்களா.................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இருந்து அறியமுடிகின்றது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன பங்காளிக் கட்சிகளாக அங்கம் வகிக்கின்றன. எனினும், 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஹக்கீம், ரிஷாத்தைத் தவிர மேற்படி கட்சிகளின் முஸ்லிம் எம்.பிக்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இந்நிலையில், மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு உட்பட 10 விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளது.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தீர்மானித்துள்ளன.

எனினும், அந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்ற கேள்வி அரசியல் களத்தில் எழுந்துள்ளது.

சிலவேளை எதிர்த்து வாக்களிக்காவிட்டாலும்கூட நடுநிலை வகிக்கக்கூடும் என தெரியவருகின்றது.

கம்மன்பிலவின் கட்சியில் முஸ்லிம் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வருபவர்கள் இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு இருந்து வருவதால் அவருக்கு எதிரான பிரேரணையை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களிக்கக் கூடும் எனவும் சிலர் தெரிவிக்கின்றனர்.

## போதனா வைத்திய.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேராவின் தந்தையார் கே.டி. சிறிசேன மற்றும் அவருடைய மாமனார் வில்லியம் ஆரியராஜா நினைவாக இந்த வென்டிலேட்டர்கள் வழங்கப்பட்டன.

மிக இக்கட்டான தற்போதைய சூழலில் இந்த வென்டிலேட்டர்கள் மிக அத்தியாவசியமானவை என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் சிறீபவானந்தராஜா தெரிவித்தார்.

13.5 மில்லியன் ரூபா பெறுமதியான 3 வென்டிலேட்டர்கள் உபகரணங்களே இன்று இவ்வாறு வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியசாலை பதில் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் தம்மிக்க பெரேராவின் குடும்பத்தினர் ஆகியோர் பங்குபற்றினர்.

## பயங்கரவாதத்........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

யாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. எனவே, அதில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

தேசிய பாதுகாப்பு, மனித உரிமைகள் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மாறாக சர்வதேச தேவைக்காக நாம் இதனைச் செய்யவில்லை – என்றார்.

## முழு அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தனமான பிரேரணையாகும்.

இது, அரசுக்கும் இருக்கும் உதய கம்மன்பிலவுக்கும் மாற்று சக்தியினருக்கும் இடையிலான முரண்பாடுகளை இல்லாமல் செய்யும் நடவடிக்கையாகும் – என்றார்.

## பயணத்தடை......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வீதியில் பயணித்த இருவரும் பலியாகியுள்ளனர்.

எனவே, மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு சாரதிகளிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## அமைச்சர் கம்மன்பில....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

எதிரணி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்லவால் மேற்படி பிரேரணை கையளிக்கப்பட்டது.

வலுசக்தி அமைச்சருக்கு எதிராக மேற்படி பிரேரணையில் 10 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## எரிபொருள் விலை....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

சைக்கிள்கள், மோட்டார்சைக்கிள்கள், ஓட்டோக்கள், டிரக்டர்கள் மற்றும் மாட்டு வண்டில்கள் ஆகியவற்றிலும், நடந்தும் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு இன்று வருகை தந்தனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டிக்கும் வகையில் பல்வேறு பதாகைகள் மற்றும் கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

## அரசியல் கைதிகளை...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நாடாளுமன்றம் இன்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இந்த சந்தர்ப்பத்தில் எழுந்து கருத்து வெளியிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும், விளையாட்டுத்துறை அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உட்பட பல இளைஞர்கள் தங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்படாமலோ அல்லது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமலோ நீண்ட கால சிறைத்தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

இந்தநிலையில், அவர்களின் வழக்குகளை விரைவுபடுத்துவதற்கும் அல்லது வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கும் அவர்களை தண்டிப்பதற்கும் விடுவிப்பதற்கும் ஒரு பொறிமுறையை அரசு செயற்படுத்த வேண்டும் – என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேகநபர்கள் பலர் இன்னும் சிறைகளில் உள்ளனர். வழக்கு விசாரணைகளின் பின் 35 பேரே தண்டனை பெற்று தொடர்ந்தும் சிறையில் இருப்பதோடு அவர்கள் பெற்ற தண்டனைக் காலத்திற்கும் மேலதிகமாகவே தண்டனை கிடைக்கும் முன்னர் சிறையில் கழித்துவிட்டனர். அத்துடன் 20 வருடங்களுக்கும் மேலதிகமாக சிலர் தடுப்பில உள்ளனர். எந்த வழக்கும் தொடரப்படாத நிலையில 13 பேர் உள்ளனர். வழக்கு விசாரணை நிறைவுபெற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத 116 பேர் உள்ளனர். அவ்வாறு பல இளைஞர்கள் சிறைகளில் உள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை முடிவுறுத்த வேண்டும். அல்லது விடுவிக்கப்பட வேண்டும். கடந்த ஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 12,500ற்கும் அதிகமானவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதோடு 3,500 பேருக்கு சிவில் பாதுகாப்புப் பிரிவில் தொழில் வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

நான் சிறைச்சாலையில் இருந்த சந்தர்ப்பத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்த பலரைச் சந்தித்தேன். அவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற காலம் எனது வயதை விடவும் அதிகம். இன்றுவரை அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு முடியாமலிருக்கின்றது. அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது புனர்வாழ்வுக்கு அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

சிறைச்சாலையில் நான் சந்தித்த ஒருவருடைய கதை ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். குறிப்பிட்ட ஒரு பிரபலம் ஒருவரது படுகொலை வழக்கில் இவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். குறித்த கைதி, செய்த குற்றம் என்னவென்றால், மரமொன்றில் கிளையை வெட்டியமையாகும். கிளையை வெட்டியவர் சிறையில், ஆனால் பிரதான குற்றவாளி வெளியே சுதந்திரமாக உள்ளார்.

அதனால், 12,500 முன்னாள் போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி விடுதலை செய்தமை மற்றும் 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க எம்மால் முடியும் என்றால், இந்த விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம் அல்லது புனர்வாழ்வுத்திட்டத்தின் ஊடாக இவர்களுக்கு நீதியை வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இதுவொரு மன உளைச்சல் பிரச்சினையாகும். எமது அரசாங்கம் எவருக்கும் அநீதியை செய்யாது என்பதையும் குறிப்பிடுகின்றேன் – எனத் தெரிவித்தார்.


**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**Education Page**

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com

076 443 8622

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622










# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## மோசமான பொருளாதார நெருக்கடி

நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கும் புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

2020 செப்டெம்பருக்குப் பின்னர் நுகர்வோர் விலைச் சுட்டி கடந்த மே மாதத்தில் மிக உச்சமாக உயர்ந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

தேசிய நுகர்வோர் விலைச் சாட்டி கடந்த பன்னிரண்டு மாதங்களில் கடந்த மாதம் மிகவும் உயர்ந்து 6.1 வீதத்தை எட்டியது. அதற்கு முந்திய மாதத்தில் – ஏப்ரலில் – இது 5.5 வீதமாக இருந்தது.

உணவுப் பொருள்களின் விலை உயர்வு ஏப்ரலில் 9.7 வீதமாக இருந்தது. அது கடந்த மே மாதத்தில் 10.3 வீதமாக எகிறியுள்ளது எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேபோல, உணவுப் பொருள்கள் அல்லாத பாவனைப் பொருள்களின் விலையும் ஏப்ரல் மாதத்தில் 2.2 வீத அதிகரிப்பிலிருந்தது. அது கடந்த மாதத்தில் 2.5 வீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

இந்த விலை அதிகரிப்புப் பற்றிய புள்ளிவிவரங்கள் எல்லாம் இந்த மாதத்தில் திடீரென மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றத்துக்கு முந்தியவையாகும்.

இந்த மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பு, அதன் தொடர்ச்சியாக வாழ்க்கையுடன் தொடர்புடைய எல்லாத் துறைகளிலும் மோசமான செலவின அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பது கண்கூடு.

போக்குவரத்துச் செலவினத்தில் தொடங்கி, அத்தியாவசியப் பொருள்கள், உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு வரை தொடர் சங்கிலியாகப் பல பாதிப்புகளை அது ஏற்படுத்தி நிற்கின்றது என்பது மக்கள் வெளிப்படையாக உணரும் நிலைமையாக உள்ளது.

இந்த ஜூன் மாதத்தின் முடிவில் புள்ளிவிவரங்கள் கணக்கிடப்படும் போது இந்த விலை உயர்வு அதிகரிப்பு வீதம் மிக மோசமாக உயர்ந்திருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

கொரோனா நெருக்கடி, போக்குவரத்து முடக்கம், பயணக் கட்டுப்பாடு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்று இன்னோரன்ன நெருக்கடிகளில் மக்கள் சிக்கிக் கிடந்த சமயத்தில், மரத்தில் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போல எரிபொருள் விலை அதிகரிப்பைத் திடுதிப்பென அறிவித்து, மக்களை மோசமான நெருக்கடியில் ஆழ்த்தியிருக்கின்றது அரசு.

இதேசமயத்தில் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கும் – தூரப் பார்வையற்ற – சில நடவடிக்கைகளை அரசு எடுத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கடந்த 18 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வார காலத்துக்குள் அரசு புதிதாக இரண்டாயிரத்து இரு நூறு கோடி ரூபா பெறுமதிக்குப் புதிய நோட்டுக்களை அச்சிட்டுள்ளதாக 'இக்கொனமிஸ்ட்' இணையத்தளம் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இந்தப் பணம் உடனடியாகப் புழக்கத்திற்கு வருமா என்பது பற்றிய செய்தி ஏதும் வெளியாகவில்லை.

ஆனால், உரிய திட்டமிடல், போதிய தங்க சேகரிப்புப் பேணல் இல்லாமல் இப்படிப் பணநோட்டை அடித்துத் தள்ளிப் புழக்கத்துக்கு விட்டால் நாட்டின் – அரசின் – உடனடி நெருக்கடி தணியலாம்.

ஆனால் நாட்டின் பண மதிப்பு – ரூபாவின் பெறுமதி – மோசமாக வீழ்ச்சியுறும். விலைவாசி எகிறும். பொருளாதாரம் படுக்கும். அந்நிய செலாவணியில் அது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இப்படிப் பொருளாதாரத்தை மிக மோசமாய்ப் பாதிக்கும் நடவடிக்கைகளை அரசு கண்மூடித்தனமாக முன்னெடுப்பது கண்டனத்துக்குரியது.

அவசர நிதி நெருக்கடி காரணமாக அரசு ஐயாயிரம் கோடி ரூபாவைத் திரட்டுவதற்காகப் பிணை முறிகளை ஏலத்தில் விட முன் வந்தது. ஆனால் அதில் அறுபது வீதத்தைக் கூட கொள்வனவு செய்ய எவரும் முன் வரவில்லை. அதனால் அந்த வகையில் நிதி திரட்டும் அரசின் முயற்சி பலனளிக்கவில்லை. அதனை அடுத்தே – அந்தத் தொகையை ஈடு செய்வதற்காகவே – போன வாரத்தில் இவ்வளவு தொகைக்குப் பண நோட்டுகள் புதிதாக அச்சிடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

அதனால் அவை விரைவில் புழக்கத்துக்கு விடப்படும் என்றும், அதனால் ரூபாவின் மதிப்பு மேலும் வீழும் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதத்திலேயே இப்படி புதிய நோட்டுக்களை அச்சிட்டுப் புழக்கத்துக்கு விடுவதன் மூலம் துண்டு விழும் – நெருக்கடி தரும் – தொகையை சமாளிப்பதற்கு அரசு திட்டமிடப்படிருந்ததாம்.

ஆனாலும் 40 கோடி டொலர்களை (சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாவை) சீன அபிவிருத்தி வங்கி இலங்கைக்குத் தற்காலிகக் கடனாக அப்போது வழங்கியிருந்தமையால், புதிய நோட்டுகள் அச்சிடும் நடவடிக்கை சுமார் ஒன்றரை மாதங்கள் பிந்திப் போடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

வெளி நாடுகளில் கடன்களை வாங்கியும், புதிய நோட்டுக்களைக் கண்மண் தெரியாமல் அச்சிட்டு புழக்கத்திற்கு விடுவதன் மூலமும், உடனடி பொருளாதார நெருக்கடிகளை அரசு சமாளித்தாலும் அவற்றின் விளைவு மிக மோசமான பொருளாதாரப் பாதிப்பை – பின்னடைவை – தரும் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

# ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவு விவசாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்

## மக்களின் குரல் அமைப்பு ஆதங்கம்



ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானத்தால் நாட்டில் உர இறக்குமதி தடை செய்யப்படும் நிலைமைக்கு தள்ளப்படும் வாய்ப்பு காணப்படுகிறது என கிழக்கு மக்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அருண் ஹேமச்சந்திரா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நாட்டில் பெரும்பாலான மக்கள் விவசாய நடவடிக்கையையே முன்னெடுத்துள்ளனர்.

ஆனால், அவர்களது விவசாயத் தேவைகளுக்கான உரங்கள் சீராக வழங்கப்படாத வேளையில் பஞ்சம் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறு நிலவுகின்றது.

இதேவேளை எந்தவித விஞ்ஞான ரீதியான ஆய்வும் மேற்கொள்ளாமல், ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானத்தால் நாட்டில் உர இறக்குமதி தடை செய்யப்படும் நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறு எந்தவிதமான மாற்றீடுகளும் இல்லாமல் உர இறக்குமதியைத் தடை செய்வது நல்லதொரு விடயமல்ல. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டெல்டா மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் அடையாளம் காணல்

மாதிவெலவில்வசிப்பவர்ஒருவர்கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது.

53 வயதான பெண் தற்போது தொற்றுநோய்கள் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

டெல்டா மாறுபாடு மாதிவெலவில் பரவி வருவதாக சந்தேகம் எழுந்து சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையிலேயே மாதிவெலவில் வசிக்கும் பெண் ஒருவரே கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

டெல்டா மாறுபாடு முதன்முதலில் தெமட்டகொட பகுதியில் கண்டறியப்பட்டது.

கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாடு ஏற்கனவே நாடு முழுவதும் பரவியிருக்கலாம் என்று சுகாதார ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரமளிப்பு



தற்போதைய தேவைக்கு ஏற்ப 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் ஆண்டு உரச் சட்டத்தை மாற்றுவதற்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த விவசாய அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி உர உற்பத்தி, தயாரித்தல், இறக்குமதி, விநியோகம் மற்றும் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான விதிமுறைகள் 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சட்டத்தின் சில விதிகள் போதுமானவையாக இல்லை என்பதுடன் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன என விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியிருந்தது.

குறிப்பாக, இயற்கை உரங்களை முழுவதுமாக நாட்டில் செயற்படுத்த, சட்டத்தில் தொடர்புடைய விதிகளை உள்ளடக்க வேண்டிய அவசியம் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# கொவிட் சடலத்தை பார்த்து மக்கள் ஓட்டம் தகனம் செய்கின்ற இடத்தில் குழப்ப நிலைமை



தென்னிலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் தகனம் செய்யும் இடத்திற்கு கொண்டு வரப்பட்டு மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

களுத்துறை வஸ்கடுவயில் உள்ள தகன நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட கே.டி.ஜயசேன என்ற 85 வயதுடைய நபரின் சடலமே இவ்வாறு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் தகனத்துக்காக பிற்பகல் 12 மணி நேரம் ஒதுக்கிக் கொள்ளப்பட்டது. அதற்காக 11.30 மணியளவில் தகனம் செய்யும் இடத்தை வந்தடைந்துள்ளனர். எனினும் சுகாதாரப் பரிசோதகர் உட்பட சுகாதாரப் பிரிவு ஊழியர்களின் தாமதம் காரணமாக சடலம் பிற்பகல் 2 மணிக்கே கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் பிற்பகல் 2 மணிக்கு மற்றுமொரு சடலத்தை தகனம் செய்ய ஒதுக்கப்பட்டிருந்தது. 1.50 மணியளவில் குறித்த சடலத்துடன் கிட்டத்தட்ட 40 பேர் வரையில் தகனம் செய்யும் இடத்துக்கு வருகை தந்துள்ளனர்.

கொவிட் சடலத்தைக் கொண்டு வந்த அம்புலன்ஸ் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கே இந்த சடலமும் கொண்டுவரப்பட்டுள்ளது. அம்புலன்ஸில் கொவிட் சடலம் இருப்பதை அறிந்து கொண்ட அந்த மக்கள் அங்கிருந்து ஓட்டம்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். இதனால் அந்த இடத்தில் பாரிய குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

இறுதியில் சுகாதார அதிகாரியின் ஆலோசனைக்கமைய கொவிட் தொற்றாத சடலம் முதலில் தகனம் செய்யப்பட்டுள்ளது. மாலை வேளையில் கொவிட் சடலத்தை தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

# புதிய பொருளாதார தடைகளை ரஷ்யா மீது விதிக்கும் அமெரிக்கா



ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என அமெரிக்கா கூறி வருகிறது.

மேலும் இந்த விவகாரத்தில் அமெரிக்கா ரஷ்யா மீது ஏற்கனவே பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இந்த சூழலில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அண்மையில் சுவிட்ஸர்லாந்து தலைநகர் ஜெனீவாவில் ரஷ்ய அதிபர் புடினை முதல் முறையாக நேரில் சந்தித்து பேசினார். இந்தப் பேச்சு வார்த்தையின் போது அவர் அலெக்சி நவால்னி விவகாரம் குறித்து பிரச்சினை எழுப்பினார். ஆனாலும் இந்த பேச்சுவார்த்தை இணக்கமாக நடைபெற்றது என புடின் தெரிவித்தார். இந்த நிலையில் அலெக்சி நவால்னி விவகாரத்தில் ரஷ்யா மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா தயாராகி வருவதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது இதுபற்றி அவர் கூறுகையில் “அலெக்சி நவால்னி வழக்கில் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதார தடைகளின் மற்றொரு தொகுப்பை நாங்கள் தயார் செய்து வருகிறோம். நாங்கள் சரியான இலக்குகளைப் பெற தொகுப்புகளை உருவாக்கியுள்ளோம் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பொருளாதார த் தடை அறிவிப்பு வெளியாகும். அதைசெய்யும்போது ரசாயன ஆயுதங்கள் தொடர்பாகவும் மேலும் பொருளாதார தடைகளை விதிப்போம்” என கூறினார்.



## நைஜீரியாவில்
# பயங்கரவாத அச்சுறுத்தலால் மூடப்படும் பள்ளிக்கூடங்கள்

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் கடும் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோ ஹறம் பயங்கரவாதிகள் அவ்வப்போது பள்ளி மாணவர்களைக் கடத்திச் சென்று அவர்களை தற்கொலைப்படை பயங்கரவாதிகளாக மாற்றி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தும் பிற ஆயுதக்குழுக்கள் பள்ளி மாணவர்களைக் கடத்தி பிணையகைதிகளாக வைத்துக் கொண்டு தங்களுக்கு தேவையான காரியத்தை சாதித்துக் கொள்கின்றன.

குறிப்பாக கடந்த சில மாதங்களாக நைஜீரியாவில் பள்ளிக்கூடங்களுக்குள் புகுந்து மாணவர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்தநிலையில் நைஜீரியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள கெப்பி மாகாணத்தில் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பு இல்லாத பள்ளிக்கூடங்களை மூட மாகாண அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி அந்த மாகாணத்தில் தற்போது 7 பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ளன.

மாகாணம் முழுவதும் உள்ள பள்ளிக்கூடங்களின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னர் மேலும் பல பள்ளிக்கூடங்கள் மூடப்படும் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# செர்பியாவில் 85 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய முதலை



செர்பியா நாட்டின் தலைநகர் பெல்கிரேடில் அமைந்துள்ள மிருகக்காட்சி சாலையில் வசிக்கும் முதலை ஒன்று தனது 85 வது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளது.

முஜா என்று பெயர் கொண்ட அந்த முதலை 1937ஆம் ஆண்டு இங்கு கொண்டு வரப்பட்டது.பல்வேறு குண்டுவீச்சு சம்பவங்களில் உயிர் தப்பியுள்ள இந்த முதலை இன்னும் ஆரோக்கியத்துடன் இருப்பதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

மாட்டிறைச்சி, பறவைகள், முயல்கள், எலிகள் மற்றும் குதிரை இறைச்சி ஆகியவை இந்த முதலைக்கு உணவாக அளிக்கப்பட்டு வருகின்றன.இந்த வயதிலும் முதலை சுறுசுறுப்பாக இருப்பதாக மிருகக் காட்சிச் சாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

# யோகா நேபாளத்தில் தான் உருவானது பிரதமர் சர்மா ஒலி சர்ச்சையான பேச்சு

அகில உலகத்துக்கு இந்தியா வழங்கிய பெருங்கொடைகளில் முக்கியமானது யோகா. மனித குலத்தின் நலம் பேணும் அற்புதமான இந்தக் கலைக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் ஆண்டுதோறும் ஜுன் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி 7ஆவது சர்வதேச யோகா தினம் நேற்று உலகமெங்கும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி மக்கள் வீடுகளில் தனியாகவும், பொது இடங்களில் குழுவாகவும் பல்வேறு ஆசனங்கள் மற்றும் பிராணாயாம மூச்சுப் பயிற்சிகளில் ஈடுபட்டனர். மலை உச்சிகள் முதல் கடற்கரை வரை, நகர சதுக்கங்கள் முதல் பூங்காக்கள் வரை என உலகம் முழுவதும் நேற்று சிறப்பான யோகா கொண்டாட்டங்கள் நடந்தன.

இந்நிலையில், காத்மாண்டுவில் நேற்று நடந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் நேபாள நாட்டுப் பிரதமர் கே.பி. சர்மா ஒலி பேசியதாவது:

யோகா இந்தியாவில் தோன்றியது அல்ல. யோகா கண்டுபிடிக்கப்பட்டபோது இந்தியா ஒரு நாடாகவே இல்லை. பல ராஜ்ஜியங்களாக



இருந்தது. நேபாளத்தில் தான் யோகா தோன்றியது. அதை சர்வதேச அரங்கில் முன்னிறுத்த நாம் தவறிவிட்டோம். ஆனால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதற்கு உரிமை கோரி, சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்று விட்டார்.

நம் நாட்டைச் சேர்ந்த முனிவர்கள், யோகிகள் குறித்தும் உலகுக்கு தெரிவிக்கத் தவறிவிட்டோம். நேபாளத்தில் உள்ள அயோத்தியாபுரியில் தான், ராமர் பிறந்தார். சீதாவும் நேபாளத்தின் தேவ்கட் பகுதியில் பிறந்தவர். முனிவர் வால்மீகியும் இங்கு தான் பிறந்தார். ஆனால் இந்த வரலாறு திருத்தப்பட்டுவிட்டது. அதை சரி செய்ய வேண்டிய நேரம் நமக்கு வந்துவிட்டது எனத் தெரிவித்தார்.

# அமெரிக்க மாகாணத்தை புரட்டிப்போட்ட சக்தி வாய்ந்த கிளாடெட் புயல்: 13 பேர் பலி;



அமெரிக்க மாகாணத்தை சக்தி வாய்ந்த புயல் புரட்டிப் போட்டுள்ளது. இந்த புயல் காரணமாக பச்சிளம் குழந்தை உட்பட 13 பேர் பலியாகினர்.

காலநிலை மாற்றம் காரணமாக அமெரிக்காவை அடிக்கடி பயங்கர புயல்கள் தாக்கி வருகின்றன. அந்த வரிசையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு தீவிர புயலாக வலுப்பெற்று அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதியை நோக்கி நகர்ந்தது. இந்த புயலுக்கு கிளாடெட் என பெயர் சூட்டப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை கிளாடெட் புயல் அலபாமா மாகாணத்தை தாக்கியது. மணிக்கு பல மைல் வேகத்தில் சூறாவளி காற்று காரணமாக சுழன்றடித்தது.

இதில் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன; மின்கம்பங்கள் சரிந்தன, வீடுகள் மற்றும் கடைகளில் மேற்கூரைகள் தூக்கி வீசப்பட்டன. புயல் காரணமாக அலபாமா மாகாணத்தில் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டது. புயலைத் தொடர்ந்து அலபாமாவில் கடும் மழை கொட்டி தீர்த்தது. இதன் காரணமாக அங்குள்ள பல்வேறு நகரங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சாலைகளில் வெள்ளம் ஆறாக ஓடியது.



# இந்தியாவில் ஒரே நாளில் 80 லட்சம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு சாதனை!

இந்தியாவில்கொரோனாவின் இரண்டாவது அலை குறையத் தொடங்கியுள்ள நிலையில், தடுப்பூசி செலுத்தும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாவது அலைப்பாதிப்பைத்தடுப்பூசி செலுத்துவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்று பரவலாக மருத்துவநிபுணர்கள்கூறுவதால், அந்தப்பணி முழு வீச்சில் நடைபெற்றுவருகிறது.

18வயதுக்குமேற்பட்டஅனைவருக்கும் தடுப்பூசி இலவசமாகச் செலுத்தப்படும் என்று பிரதமர் மோடி அண்மையில் அறிவித்திருந்தார். மாநில அரசுகளுக்குமத்தியஅரசேநேரடியாக கொரோனாத் தடுப்பூசிகளை விநியோகிக்கும் எனவும் அவர் அறிவித்தார். அந்த நடைமுறை நேற்று முதல் அமலுக்கும் வந்துள்ளது.

இந்த நிலையில், இந்தியாவில் இதுவரை இல்லாத வகையில் நேற்று ஒரே நாளில் 80 லட்சம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை 8.30 மணிவரையான நிலவரப்படி 80 லட்சம் பேருக்குக்கொரோனாத்தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என இந்திய மத்திய சுகாதாரத் துறைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் 30 இலட்சத்து 39 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்ட நிலையில், அந்த எண்ணிக்கை நேற்று கிட்டத்தட்ட இரண்டரைமடங்கு அதிகரித்துள்ளது.

இதற்கு முன்பாக, கடந்த ஏப்ரல்2ஆம்திகதி42இலட்சத்து 65 ஆயிரத்து 157 பேருக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டதே அதிகபட்சமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் வரும் நாள்களில் மேலும் வேகமெடுக்கும் என சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 'நீட்' தேர்வை முழுதாக அகற்றவேண்டும் சீமான் தனது ருவிட்டர் பதிவில் தெரிவிப்பு

நீட் தேர்வினை நீக்குவது பற்றி தமிழகத்தில் பல விவாதங்கள் நடந்துவரும் நிலையில், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது ருவிட்டர் பதிவில், 'நீட் தேர்வு முற்றுமுழுதாகத் துடைத்தெறியப்படவேண்டும்!' என்று தெரிவித்துள்ளார்.

'இந்தியாவின் பன்முகத் தன்மைக்கும் கூட்டாட்சிக்கும் எதிராகக் கொண்டுவரப்பட்ட நீட் எனும் மத்தியத்தர ஒற்றைத் தகுதித்தேர்வு பிற்படுத்தப்பட்ட, உழைக்கும் ஆதி தமிழ்க் குடிகளின் பிள்ளைகளை வைத்தியராகவிடாது தடுக்கிறது. மனுதர்மத்தின் நவீன வடிவான 'நீட்' தேர்வை முற்று முழுதாக தமிழக அரசு துடைத்தெறிய வேண்டும். மாநில தன்னாட்சியையும் தன்னுரிமையையும் நிலைநாட்ட, மண்ணின் மக்களின்நலவாழ்வைஉறுதிசெய்ய, வைத்தியராகும்பெருங்கனவை வர்க்க வேறுபாடின்றி யாவருக்கும்உறுதிசெய்ய 'நீட்' எனும் தடைக்கல்லை முழுதாக அகற்ற வேண்டும்!' என்று அவர் கூறியுள்ளார்.



# மக்கள் கொரோனாவோடு போராடும்போது தேர்தல் பலப்பரீட்சை பற்றி பேசுவதா?

## மகாராஷ்டிரா காங்கிரஸ் கட்சியினரிடம் முதல்வர் உத்தவ்தாக்கரே கேள்வி!




மகாராஷ்டிராவில் பா.ஜ.க.வுடன் கூட்டணி உறவை முறித்துக்கொண்ட சிவசேனா, தனது கொள்கைக்கு முரண்பாடான காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை நடத்திவருகிறது.

இந்த நிலையில், 'வரும் தேர்தல்களைத் தனித்துச் சந்திப்போம்!' என காங்கிரஸ் மாநிலத் தலைவர் நானா படோலே கூறிவருகிறார். 'மும்பை மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் தனித்து போட்டியிடும்' என்று காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் பாய் ஜக்தாப் கூறியிருந்தார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், 'காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு செய்தால், வரும் தேர்தல்களை நாங்கள் தேசியவாத காங்கிரசுடன் கூட்டணி வைத்துச் சந்திப்போம்!' என்று சிவசேனா மூத்த தலைவர் சஞ்சய் ராவத் கூறியிருக்கிறார்.

இதற்கு மத்தியில், சிவசேனாவின் 55 ஆவது ஆண்டு நிறுவன நாளையொட்டி முதலமைச்சர் உத்தவ் தாக்கரே நேற்று உரையாற்றியிருந்தார். அப்போது அவர் மாநில காங்கிரஸ் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் சில கருத்துக்களை வெளியிட்டார்.

சிலர் தங்களது சொந்தப் பலம் பற்றிப் பேசி வருகின்றனர். எங்களாலும் அதுபோலபேசமுடியும். நீங்கள்சொந்தப்பலம்என்றுஎதைச்சொல்கிறீர்கள்? கண்டிப்பாக அது முக்கியம்தான்; தேவையும் தான். ஆனால் தேர்தலுடன் மட்டும் அதைக் குறுக்கிவிட முடியாது. மும்பை மற்றும் மகாராஷ்டிரத்தில் மராத்திபேசும்மக்களுக்குசிவசேனாசெய்ததுபோல, நீதி கேட்பதிலும் இருக்க வேண்டும்.

ஆட்சி அதிகாரத்திற்காக பலவீனமான நிலையிலோ அல்லது தேவையின்றியோ மற்றவர்களின் சுமையையும் தூக்கிச் சுமக்கமாட்டோம். சொந்தக் கால்களில் பெருமிதத்துடன் நடப்போம். அதுவே எங்களின் குறிக்கோள். பொது மக்கள் கொரோனாவுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். நிதி பிரச்சினையில் தவிக்கின்றனர். இந்த நேரத்தில் தேர்தலைத் தனித்துச் சந்திப்போம் என்று பலப்பரீட்சை பற்றிப் பேசுவது சரியானதல்ல. தற்போது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் தனித்துப் போட்டியிடுவது பற்றி பேசினால், மக்கள் நம்மை செருப்பால் அடிப்பார்கள். தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது போன்ற, கட்சியை மையப்படுத்திய நமது ஆசைகளுக்கு பொதுமக்கள் செவிசாய்க்க மாட்டார்கள். மக்கள் நம்மைத் தோற்கடிப்பார்கள்.

பொதுமக்கள் சா லைகளில் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள் ளப்படும்போது, நமது சொந்தப் பலத்தை காட்டு வதில் என்ன பயன்? நாம் இந்த ஆட்சி அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்தப் போகிறோம்? தேர்தல் நேர மனநிலையை விட்டுவிட்டு நாம் இந்தப் பெருந்தொற் றுக்கு எதிராக போராட வேண்டும்! என்று முத லமைச்சர் உத்தவ் தாக் கரே உரையில் அழுத்த மாகத் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் தினசரி கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை

# 50 ஆயிரத்துக்கு கீழ்க் குறைந்தது



இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 42,640 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதால், நாட்டின் மொத்த கொரோனாப் பாதிப்பு 2 கோடியே 99 லட்சத்து 77 ஆயிரத்து 861ஆக உள்ளது. இன்றைய கொரோனாத் தொற்றுப் பாதிப்பு அறிக்கையின்படி கடந்த 91 நாட்களில் குறைவான தினசரி பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

அதே நேரம், கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் 1,167 பேர் கொரோனாப் பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். இதனால் நாட்டின் மொத்தக் கொரோனாப் உயிரிழப்பு எண்ணிக்கை 3 லட்சத்து 89 ஆயிரத்து 302 ஆக உயர்ந்துள்ளது. இன்று 81 ஆயிரத்து 839 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து குணமடைந்துள்ளனர். ஆகவே, இந்தியாவில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 89 லட்சத்து 26 ஆயிரத்து 38 ஆக உயர்ந்துள்ளது.

# ராகுல் காந்தி உடனடியாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும்

## மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் வேண்டுகோள்

இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசிக்கு அவற்றின் தயாரிப்பு நிறுவனங்களே விலை நிர்ணயிக்க மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த காங்கிரஸ் கட்சி, தடுப்பூசிகள் அனைத்துக்கும் ஒரே மாதியான விலை இருக்க வேண்டும் என்றும் மக்களுக்கு இலவசமாக தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என்றும் இந்திய மத்திய அரசை வலியுறுத்தியது.

இதையடுத்து, இந்தியா முழுவதும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி செலுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்தது. எனினும் தடுப்பூசி விலை விவரம், பற்றாக்குறை போன்ற விவகாரங்கள் தொடர்பாக ராகுல் காந்தி தொடர்ந்து மத்திய அரசை விமர்சித்து வருகிறார். அவருக்கு பா.ஜ.க. தலைவர்கள் தொடர்ந்து எதிர் விமர்சனங்களைக் கொடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், ராகுல் காந்தி தடுப்பூசி செலுத்திக் கொண்டாரா என்பதை இதுவரை அறிவிக்கவில்லை. நீங்கள் இன்னமும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை எனில் உடனடியாக அதைச் செய்யவும். இதனை உங்களிடம் வேண்டுகோளாக முன்வைக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# பசளை விற்பனை செய்யும் நிலையங்களில் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இரசாயன மற்றும் பசளை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு திஎ்சுற்றிவளைப்புக்கள்மேற் கொள்ளப்பட்டதுடன் அக் கடைகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

ஆரோக்கியமான நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை உறுதி செய்வதற்காக விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகள் மற்றும் களை நாசினிகளை இறக்குமதி செய்வதை அரசாங்கம் சமீபத்தில் தடை செய்தது.

அதே நேரத்தில், மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அலுவலர்கள் அதிகார சபையினால் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இரசாயன உரவிற்பனையாளர்கள் அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்வதாகவும், உரங்களை தங்கள் கிடங்குகளில் மறைத்து வருவதாகவும் பல முறைப்பாடுகள் வந்ததற்கமைய கிழக்கு மாகாணஉதவிப்பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தலைமையில் நேற்று சுற்றிவளைப்பு ஒன்று இடம் பெற்றது.

அதன்படி, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் அரசாங்க அதிபர் கே.கருணாகரன் வழிகாட்டுதலின் கீழ் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தலைமையில் கிரான் குளம்,செட்டிப்பாளயம், களுதாவளை மற்றும் களுவாஞ்சிக்குடி பகுதிகளில் சிறப்பு தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, மேற்படி பிரதேசங்களில் யூரியா உரங்கள் உள்ளதா? என்று விசாரிக்க இரசாயன விற்பனை நிலையங்கள் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதற்காக இப்பகுதியில் உரங்கள் உள்ளிட்ட வேளாண்மை இரசாயனங்கள் விற்கும் கடைக்கு ஒரு புலனாய்வு நிபுணர்கள் குழு அனுப்பப்பட்டதாக ஆர்.எப், அன்வர் சதாத் தெரிவித்தார்.



# எண்ணெய்க் கசிவின் தாக்கத்தால் கரையொதுங்கும் உயிரினங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கடற்கரைகளிலும் இறந்த ஆமைகள் மற்றும் டொல்பின்கள் கரையொதுங்கியுள்ளன.

கொழும்பை அண்மித்த கடலில் எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் எண்ணெய்க் கசிவின் தாக்கமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

நேற்று ஏறாவூர்புன்னைக்குடா கடற்கரையில் இரண்டு ஆமைகளும் வாகரை கடற்கரையில் மூன்று ஆமைகளும் கரையொதுங்கியுள்ளன என வன ஜீவராசிகள் திணைக்கள சுற்றுவட்ட பொறுப்பதிகாரி அப்துல் ஹலீம் தெரிவித் தார்.

இதேவேளை கடந்தசில தினங்களுக்கு முன்னர் கிரான்குளம் கடற்கரையில் மூன்று ஆமைகளும் இரண்டு டொல்பின்களும் நாவலடி கடற்கரையில் ஓர் ஆமையும் கரையொதுங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ள பிராணிகள் உடற்கூறு பரிசோத னைக்காக அம்பாறைக்கு எடுத்துச் செல்லப்பப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆமைகள் பெருமளவில் இறந்து கரையொதுங்குகின்றமை இதுவே முதல் தடவையென வன ஜீவராசிகள்திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேசமயம் கிழக்கு மாகாண கடலில் உயிரினங்கள் இறந்து கரையொதுங்குவதையடுத்து ஏற்பட்ட சந்தேகம் காரணமாக பொதுமக்கள் கடல் மீன்களை உண்ணுவதற்கு அச்சம்வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தொற்றாளர்களை ஏற்றிச் செல்லும் பஸ் ஒன்றும் இராணுவ வாகனம் ஒன்றும் மோதி விபத்து

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் நேற்று இராணுவ வாகனம் ஒன்றும் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதுடன் வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

கொவிட் தொற்றாளர்களை ஏற்றியிறக்கும் சேவையில் ஈடுட்டிருந்த பஸ்ஸுடனேயே இராணுவத்தினரின் வாகனம் மோதியுள்ளது

குறித்த பகுதிக்கு வந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் சம்பவம்தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# அம்பாறை பொது வைத்தியசாலைக்கு மாளிகைக்காடு வர்த்தக சங்கம் நிதியுதவி

அம்பாறை பொது வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு சிகிச்சை உபகரணங்கள் கொள்வனவு செய்ய சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தினால் 5 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் கொரோனா அலையின் தாக்கம் கடுமையாக அதிகரித்து வரும் சூழ்நிலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவின் தேவை வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகிறது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய தமது பங்களிப்பை செய்யும் நோக்கிலேயே சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தினால் 5 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் அம்பாறை பொது வைத்தியசாலை பிரதி செயலாளர் என்.ஜி. சி. குணரத்ன, அம்பாறை மாவட்ட திறன்வான்மையாளர்கள் சங்க தலைவர், வைத்தியசாலை அதிகாரிகள், தாதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறையில் சடலம் மீட்பு

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவில் வயலோரம் இறந்த உடலொன்று காணப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபை கட்டடத்திற்கு பின்னால் அமைந்துள்ள வயல் காணியில் சடலமாக காணப்படுபவர் இறைச்சி கடை சார்ந்த கூலித்தொழிலில் ஈடுபட்டு வரும் 60 வயது மதிக்கத்தக்க உபாலி என அறியப்படும் ஜாபீர் என்பவர் என்றும் போதைப் பொருள் பாவனை பழக்கம் உள்ள இவர் கடந்த காலங்களிலும் இவ்வாறு போதைப்பொருள் மூலம் நிதானமிழந்து வீதிகளில் விழுந்து கிடந்த தார் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தென்கிழக்கு பல்கலையின் உபவேந்தராக பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவு

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக புதிய உபவேந்தராக கலை, கலாச்சார பீடத்தின் தற்போதைய பீடாதிபதி சாய்ந்தமருதைச் சேர்ந்த பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தராக இளம் வயதில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் இவர் அதே பல்கலைக்கழகத்தின் மாணவராவார்.

இலங்கைதென்கிழக்குபல்கலைக்கழக உபவேந்தர் தெரிவுக்குழுவின் பேரவைக்குழுவிற்கு தெரிவுக்குழுவினால் சமர்ப்பித்த பட்டியலில் முதலாம் இடத்தை இவர் தக்கவைத்திருந்தார் என்பதுடன் இவர் எதிர்வரும் ஆகஸ்ட் 09 ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றது

# தென்னாபிரிக்க அணி



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், தென்னாபிரிக்க அணி 158 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

சென்.லூசியாமைதானத்தில்கடந்தவெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்காவை அழைத்தது. தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் 298 ஓட்டங்களைப் பெற்றது. குயின்டன் டி கொக் 96 ஓட்டங்களையும் டீன் எல்கர் 77 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கெமர் ரோச் மற்றும் கைய்ல் மேயர்ஸ் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் கப்ரியேல் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணி 149 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பிளக்வுட் 49 ஓட்டங்களையும் ஷாய் ஹோப் 43 ஓட்டங்களையும்பெற்றனர். தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் வியான் முல்டர் 3 விக்கெட்டுக்களையும் ரபாடா, லுங்கி இங்கிடி மற்றும் மஹாராஜ் ஆகிய மூவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

149 ஓட்டங்கள் முன்னிலையோடு தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 174 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ரபாடா 40 ஓட்டங்களை எடுத்தார். வன் டர் டுசன் 75 ஓட்டங்களை எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்தார். மேற்கிந்தியத் தீவுகளின் கெமர் ரோச் 4 விக்கெட்டுகளையும் கைல் மேயர்ஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இதனால் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று தொடரைச் சமன் செய்வதற்கு மே.இ. தீவுகள் அணிக்கு 324 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. ஆயினும் அந்த அணியால் 165 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. கைய்ரன் பவல் 51 ஓட்டங்களையும் கைய்ல் மேயர்ஸ் 34 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணி 158 ஓட்டங்களால் இந்த டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க அணியின் கேசவ் மஹாராஜ் ஹட்ரிக் அடங்கலாக 5 விக்கெட்டுகளையும் ரபாடா 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ரபாடாவும், தொடரின் நாயகனாக குயின்டன் டி கொக்கும் தெரிவானார்கள். இரு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



## ஒலிம்பிக் போட்டிகளை நேரில் பார்க்க

# உள்நாட்டு ரசிகர்களுக்கு மட்டுமே அனுமதி!

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட 32 ஆவது ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் 23 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 8 வரை நடக்கவிருக்கிறது. இந்தப் போட்டிகளை நேரில் காண்பதற்கு வெளிநாட்டு ரசிகர்களுக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு ரசிகர்களை போட்டிகளை நேரில் பார்க்க அனுமதிக்கலாமா? என்பது குறித்து நீண்ட காலமாக ஆலோசிக்கப்பட்டது. ரசிகர்களை அனுமதித்தால் கொரோனாத் தொற்று பரவலாம் என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் இந்த விடயத்தில் முடிவெடுப்பதில் இழுபறி நீடித்தது.

இந்த நிலையில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை நேரில் காண உள்ளூர் ரசிகர்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து முடிவு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் டோக்கியோவில் நேற்று நடந்தது. காணொலி தொடர்பாடல் முறை மூலம் நடந்த இந்தக் கூட்டத்தில் சர்வதேச ஒலிம்பிக் குழு, ஜப்பான் அரசு மற்றும் டோக்கியோ பெருநகர நிர்வாகம், போட்டி அமைப்புக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளைக் காண உள்ளூர் ரசிகர்களை கட்டுப்பாடுகளுடன் அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இது குறித்து போட்டி அமைப்புக் குழுவின் தலைவர் செய்கோ ஹஷிமோட்டோ கூறுகையில், 'ஜப்பான் அரசு அறிவித்துள்ள கொரோனாத் தடுப்பு வழிகாட்டுதல் நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி டோக்கியோ ஒலிம்பிக் போட்டி பாதுகாப்பான முறையில் நடத்தப்படும். பொது நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில் உள்ள இருக்கைகளில் 50 சதவீத அளவுக்கு பார்வையாளர்களை அனுமதிக்கலாம் என்று அரசு தெரிவித்துள்ளது. ஒலிம்பிக் போட்டியை நேரில் பார்க்க ஒவ்வொரு அரங்கிலும் அதிகபட்சமாக பத்தாயிரம் ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படும். போட்டியைக் காண வருபவர்கள் முகக்கவசம் அணிவதுடன் சமூக இடைவெளியையும் பின்பற்றவேண்டும். கொரோனா பரவல் அதிகரித்து அவசர நிலை பிரகடனம் செய்யப்படும் சூழ்நிலை உருவானால் ரசிகர்கள் இல்லாமல் போட்டியை நடத்தலாமா? என்பது குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

'கொரோனாப் பாதிப்பு சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டு அவசர நிலை அமல்படுத்தும் நிலைமை உருவானால் ஒலிம்பிக் போட்டி பாதுகாப்புடனும், பத்திரமாகவும் நடைபெறுவதற்கு ரசிகர்களுக்கு தடை விதிப்பதற்குத் தயங்க மாட்டோம்' என்று ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகாவும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# மசிடோனியா வெளியேற நெதர்லாந்து அடுத்த சுற்றில்!



யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற போட்டியில் நெதர்லாந்து, வட மசிடோனியாவை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி-16 அணிகள் சுற்றுக்குத் தகுதி பெற்றது. நெதர்லாந்து அணிக்கு மெம்பிஸ் டீபே 24 ஆவது நிமிடத்திலும் பிறகு இடைவேளை முடிந்து ஜோர்ஜினியோ 51 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலையும் அடித்தனர். 58 ஆவது நிமிடத்தில் 3 ஆவது கோலையும் ஜோர்ஜினியோவே அடிக்க நெதர்லாந்து அணி இறுதி - 16க்குள் நீண்ட இடை வெளிக்குப் பிறகு நுழைந்தது. நொக்-அவுட் சுற்றில் நெதர்லாந்து பிரிவு டி, ஈ அல் லது குரூப் எஃப் பிரிவிலிருந்து தகுதி பெறும் மூன்றாவது அணியுடன் மோதும். இந்தப் போட்டி அடுத்த ஞாயிறன்று நடைபெறவுள்ளது.

வட மசிடோனியா அணி இந்தத் தொடரில் உறுதியுடன் விளையாடி கடும் சவாலை எதிரணிகளுக்கு வழங்கியிருந்தது. அந்த அணியின் மூத்த வீரர் கொரன் பன்டேவ் இந்தப் போட்டியுடன் ஓய்வு பெறவிருப்பதால் அவருக்கு மரியாதை செலுத்தப்பட்டது. போட்டியின் முடிவினால் கடும் ஏமாற்றமடைந்த மசிடோனியாவின் பயிற்சியாளர் இகோர் அக்கெலொவ்ஸ்கி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்

## மகத்தான கிரிக்கெட் வீரர்களுக்கான பட்டியலில்

# இலங்கையின் குமார் சங்ககார இணைந்தார்




இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான குமார் சங்ககார சர்வதேச கிரிக்கெட் சபையின் 'ஹால் ஒஃப் பேஃம்' என்ற மகத்தான கிரிக்கெட் வீரர்களுக்கான பட்டியலில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டுள்ளார்.

இந்தியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக் கிடையிலான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியின் மூன்றாம்நாள் ஆட்டத்தின்போது இதற்கான பட்டயம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. குமார் சங்கக்காரவை அதிகாரப் பூர்வமாக 'ஹால் ஒஃப் பேஃம்' பட்டியலில் இணைக்கும் விருதுப் பட்டயத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் வர்ண னையாளருமான சுனில் கவாஸ்கர் வழங்கினார்.

கவாஸ்கரும் சங்கக்காரவும் தற்போது நடைபெற்று வரும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வர்ணனையாளராக செயற்பட்டுவருகின்ற னர். 43 வயதான குமார் சங்கக்கார, தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வில் 134 டெஸ்ட், 404 ஒருநாள் மற்றும் 56 ரி-20 போட்டிகளில் விளையாடி, 63 சதங்கள் மற்றும் 145 அரைச் சதங்கள் அடங்கலாக 28,016 ஓட்டங்களை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊர்காவற்றுறையில் கடலுணவு வியாபார பிரச்சினை; அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் கிடைத்தது தீர்வு

(கலையமுதன்)
யாழ்ப்பாணம்,ஜூன் 22

ஊர்காவற்துறை தம்பாட்டி பிரதேசத்தில் கடலுணவு வியாபாரத்தில் நீண்ட காலமாக நிலவிய பிரச்சினைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தீர்வு காணப்பட்டுள்ளது.

தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், தம்பாட்டி கடற்றொழிலாளர்களிடம் கடலுணவுகளைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர்களுக்கும் இடையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஊர்காவற்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளமையால், சங்கத்தைப் புனரமைப்பு செய்து புதிய நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் எனவும் புதிய நிர்வாகத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் கடலுணவு வர்த்தகர்களால் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகக் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் -

தற்போதைய கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத் தெரிவுகளைத் தள்ளிப் போடுவது தொடர்பாக வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடியமையை சுட்டிக்காட்டியதுடன், புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும் வரையில், கடலுணவு வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரின் மேற்பார்வையில் மேற்கொள்வது சிறந்தது என்ற கருத்தை முன்வைத்தார்.

அந்தக் கருத்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில், ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி, ஊர்காவற்துறை பிரதேச சபைத் தலைவர் ஜெயகாந்தன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுபபினர் வி.கே. குகேந்திரன் ஜெகன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா இறப்பு குறித்த குற்றச்சாட்டு: தொற்றுநோயியல் பிரிவு மீது விசாரணை!

கொரோனாவால் உயிரிழந்தவர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து சமீபத்தில் எழுந்த குற்றச்சாட்டை அடுத்து தொற்றுநோயியல் பிரிவு மீது சுகாதார அமைச்சு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இறப்புக்கள் தொடர்பான குறைபாடுகள் காரணமாக அவற்றை சரிசெய்யும் நோக்கத்துடன் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக எந்தவோர் அதிகாரியின் தரப்பிலும் ஏதேனும் அலட்சியம் காணப்பட்டால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

இந்தப் பிரச்சினையை அடுத்து முன்னாள் தொற்றுநோயியல் பிரிவின் தலைவர் வைத்தியர் சுதத் சமரவீர அந்த அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் இருப்பினும், இடமாற்றம் ஒரு தேர்வு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான தவறான தரவுகளின் அடிப்படையில் ஜூன் 14 ஆம் திகதி பயணக்கட்டுப்பாடு நீடிக்கப்பட்டது என ஜனாதிபதி அண்மையில் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச உத்தியோகத்தர்களுக்கு வாரத்தில் இருநாள்கள் கடமை

அத்தியாவசிய சேவை மற்றும் அத்தியாவசியமல்லாத சேவைக்குள் அடங்கும் அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பகுதி நிலை அரச நிறுவனங்கள், பணியாளர்களைச் சேவைக்கு அழைப்பதற்கான நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடங்காத அரச நிறுவனங்களின் பணியாளர்கள் அதிகபட்சமாக வாரத்தில் இரு நாள்கள் மாத்திரம் சேவைக்கு அழைக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வீட்டில் இருந்து பணியாற்ற முடியாவிட்டால் மாத்திரமே அவர்களை இவ்வாறு சேவைக்கு அழைக்க முடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பொதுப் போக்குவரத்து சேவை ஒதுக்கப்பட்டுள்ளதால் சேவைக்கு அழைக்கப்படும் பணியாளர்களுக்கு சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, வீட்டிலிருந்து அலுவலகத்துக்கான போக்குவரத்து வசதியை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தனியார் நிறுவனங்களும் குறைந்தபட்ச பணியாளர்களுடன் அலுவலகப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் முடிந்தளவில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வீட்டில் இருந்து பணியாற்றுவதை ஊக்குவிக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## இதுவரை 53 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இந்த மாதத்தில் கொரோனாத் தொற்று உறுதி

இலங்கையில் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மொத்தம் 53 ஆயிரத்து 331 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் கொவிட் கட்டுப்பட்டு செயலணி நேற்று (திங்கட்கிழமை) இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அதன்படி அதிகளவிலான நோயாளிகள் அதாவது கம்பஹாவில் 10 ஆயிரத்து 248 பேரும் கொழும்பில் 10ஆயிரத்து182பேரும்அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

களுத்துறையில் 5 ஆயிரத்து 96 பேருக்கும், இரத்தினபுரியில் 3 ஆயிரத்து 50 பேருக்கும், குருநாகலில் 2 ஆயிரத்து 979 பேருக்கும், காலியில் 2 ஆயிரத்து 179 பேருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

கண்டியில் 2 ஆயிரத்து 146 பேருக்கும், மட்டக்களப்பில் 2 ஆயிரத்து 54 பேருக்கும், நுவரெலியாவில் 1,939 பேருக்கும், யாழ்ப்பாணத்தில் 1,724 பேருக்கும், கேகாலையில் 1368 பேருக்கும், மாத்தறையில் 1330 பதுளையில் 1,304 பேருக்கும் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

## மேலும் 18 பேருக்கு கிளிநொச்சியில் தொற்று

கிளிநொச்சி – கண்ணகி நகர் பகுதியில் 18 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்திலுள்ள 182 பேருக்கு, கடந்த 18 ஆம் திகதி பீ.சீ.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போது வெளியாகியுள்ள பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளிலேயே 18 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், குறித்த பகுதியில் அடையாளம் காணப்படுவதற்கு வாய்ப்புள்ளது எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## மீனவர் போராட்டம்; பொலிஸார் தாக்கு!



எக்ஸ் – பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து மீன் பிடிக்க முடியாமல் நாளாந்தம் இன்னல்களை அனுபவிப்பதாகத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களைப் பொலிஸார் தாக்கிய காணொலிகள் வெளியாகியுள்ளன.

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும் மீன் பிடி நடவடிக்கை தடை செய்யப்பட்ட நிலையில் தமக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என்றும் அரசாங்கம் அறிவித்துள்ள 5 ஆயிரம் ரூபா தமக்குப் போதாது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மீன்பிடி வலைகள் போன்ற சொத்துக்கள் இந்த நெருக்கடியால் அழிவடைந்துள்ள நிலையில் இதற்கு மட்டுமே 20 ஆயிரத்துக்கு மேல் செலவாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மேலும் சில மாதங்களுக்கு நாடு முழுமையாக முடங்கும் நிலை வரலாமென்கிறார் அஜித் றோஹண



நாட்டை மேலும் சில மாதங்களுக்கு முழுமையாக மூட வேண்டிய நிலை ஏற்படும் என பிரப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டு நாடு முடக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் செய்ய முடியாமல் போன அனைத்து விடயங்களையும் ஏனைய நாள்களை போன்று செய்துகொள்ள முயற்சித்தால் இந்த நிலைமை ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

இந்த வருட கடைசி வரை சிறியளவில் வேலை செய்துகொண்டிருப்பதா அல்லது இரண்டு வாரங்களில் மீண்டும் நாட்டை மூடி வைப்பதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

பயணக்கட்டுப்பாடு காலப்பகுதியில் அத்தியாவசிய சேவை கடிதம் அனுப்பி அத்தியாவசிய சேவையற்ற பலரை பணிக்கு அழைக்க நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

இம்முறை அவ்வாறான நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பில் பி.சி.ஆர். பரிசோதனைகளை புறக்கணிக்கும் மக்களால் நெருக்கடிநிலை

கொழும்பு நகரில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மக்கள் புறக்கணிப்பதால் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவது சவாலாகி உள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்தியர் ரூவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

இதனால் கொவிட் தொற்றாளர்கள் தொடர்பான தரவுகள் பெறுவதற்கு சிரமமாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் கொவிட் நோயைக் கட்டுப்படுத்த பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது எனஅவர் குறிப்பிட்டார். இதுவரையில் கொழும்பு நகரில் அதிக அவதானம் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பி.சி.ஆர். பரிசோத னைகள் தொடர்ந்து மேற்கொண்டு தொற்றாளர்களை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2021இல் வெளியிடப்பெற்றது.